# இடைத்தேர்தல் செப்டம்பர் 29, 2025 கவுன்சிலர் தொகுதி 25 ஸ்காபறோ றூஜ் பார்க்

## உங்கள் வாக்காளர் அட்டையை அணுகவும்

உங்கள் வாக்காளர் அட்டையை நீங்கள் தபாலில் பெற வேண்டிய அவசியமில்லை. நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்கள் அட்டையை உங்கள் மொபைல் (mobile) சாதனத்தில் காட்டலாம். www.toronto.ca/MyVote இல்.

## வாக்காளர் பட்டியலைச் சரிபார்க்கவும்

ஓகஸ்ட் 18 முதல், நீங்கள் வாக்காளர் பட்டியலில் இருக்கிறீர்களா என்பதைச் சரிபார்த்து, எங்கு வாக்களிக்க வேண்டும் என்பதைக் கண்டுபிடித்து, வேட்பாளர்களின் பட்டியலை இங்கே மதிப்பாய்வு செய்யவும்
www.toronto.ca/MyVote.

TORONTO

# முக்கிய திகதிகள்

## ஓகஸ்ட் 18

- வாக்காளர் பட்டியலில் தகவல்களைச் சேர்க்க, மாற்ற அல்லது புதுப்பிப்பதற்கான முதல் நாள் www.toronto.ca/MyVoteஇல் கிடைக்கும்.
- VoterRegistration@toronto.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் பதிலாள் (Proxy) படிவத்தைக் கோரி அதைச் சான்றளிக்க ஒரு சந்திப்பை மேற்கொள்வதற்கான முதல் நாள். தகவலுக்கு 311 ஐ அழைக்கவும்.

## செப்ரம்பர் 11

- கனடா போஸ்ற் (Canada Post) சேவையில் எந்த இடையூறும் இல்லை என்றால் - வாக்காளர் தகவல் அட்டைகள் (VICs) தகுதியுள்ள வாக்காளர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

செப்ரம்பர் 4ம் திகதிக்குள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள தகுதியுள்ள வாக்காளர்களுக்கு மட்டுமே தபாலில் VIC அனுப்பப்படும். நீங்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து, தபாலில் ஒரு VICஐப் பெறவில்லை என்றால், உங்கள் VIC-ஐ இங்கே அணுகவும். www.toronto.ca/MyVote இல். வாக்களிப்பதற்கு உங்களுக்கு ஒரு VIC தேவையில்லை.

## செப்ரம்பர் 20 மற்றும் 21

- காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை இரண்டு நாட்கள் முன்கூட்டியே வாக்களிப்பு
- முன்கூட்டிய வாக்களிக்கும் இடங்கள்: மல்வேர்ன் பொழுதுபோக்கு மையம் (Malvern Recreation Centre) மற்றும் ஹீரோன் பூங்கா சமூகப் பொழுதுபோக்கு மையம் (Heron Park Community Recreation Centre).

## செப்ரம்பர் 21

- வாக்காளர் பட்டியலில் தகவல்களைச் சேர்க்க, மாற்ற அல்லது புதுப்பிக்கக் கடைசி நாள் (மாலை 7 மணிக்குள்) www.toronto.ca/MyVote இல்.

## செப்ரம்பர் 29, திங்கள் கிழமை தேர்தல் நாள்.

- உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடியில் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை வாக்களிக்கவும்.
- எங்கு வாக்களிப்பது என்பதைக் கண்டறியவும் www.toronto.ca/MyVote இல்.

# வாக்களிப்புத் தெரிவுகள்

## நேரில்

கிடைக்கக்கூடிய எந்தவொரு வாக்குப்பதிவு நாட்களிலும் நேரில் வாக்களிக்கவும்.

செப்ரம்பர் 20 மற்றும் 21 ஆகிய திகதிகளில் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை நடைபெறும் முன்கூட்டிய வாக்களிப்பு வார இறுதியில் முன்கூட்டியே வாக்களிக்கவும்: இரண்டில் ஏதாவது ஒன்றில் வாக்களிக்கவும்:

- **மல்வேர்ன் பொழுதுபோக்கு மையம் (Malvern Recreation Centre)** 30 Sewells Rd.,
  **அல்லது**
- **ஹீரோன் பூங்கா சமூகப் பொழுதுபோக்கு மையம் (Heron Park Community Recreation Centre)**, 292 Manse Rd.

தேர்தல் நாளான செப்ரம்பர் 29, திங்கட்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை வாக்களிக்கவும். தேர்தல் நாளன்று உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு இடத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

தேர்தல் நாளில் எங்கு வாக்களிக்க வேண்டும் மற்றும் உங்கள் வாக்களிக்கும் இடம் பற்றிய விவரங்களைக் கண்டறிய **www.toronto.ca/MyVote.**

## தபால் மூலம்

**தபால் மூலம் வாக்களிப்பது பற்றிய முக்கிய தகவல்கள்**

கனடா போஸ்ற் சேவை விநியோகம் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக, இந்த இடைத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பது ஒரு வாக்களிக்கும் தெரிவாக  இல்லாமல் இருக்கலாம்.

**www.toronto.ca/ByElection (தேர்தல்)**க்குச் சென்று அல்லது 311 ஐ அழைப்பதன் மூலம் புதுப்பித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

## பதிலாள் (Proxy) மூலம்

நீங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வாக்களிக்க முடியாவிட்டால், நீங்கள் ஒரு வாக்களிக்கும் பதிலாளை நியமிக்கலாம். ஒரு பதிலாள் என்பது உங்கள் சார்பாக வாக்களிப்பதற்கு நீங்கள் நம்பும் ஒருவர். பதிலாள், ரொறன்ரோ நகரத்தில் தகுதியான வாக்காளராக

இருக்க வேண்டும். ஓகஸ்ட் 18 முதல், proxy படிவத்தைக் கோர **VoterRegistration@toronto.ca என்ற** மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

செப்ரம்பர் 29 ஆம் திகதி மாலை 4:30க்குள், நீங்களும் உங்கள் பதிலாளும் கையொப்பமிட்டு, வாக்களிக்கும் பிரதிநிதி நியமனப் படிவத்தை நிரப்பி, நகர எழுத்தரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

இந்தப் படிவம் திங்கள் முதல் வெள்ளி வரை வழக்கமான வணிக நேரங்களில் (காலை 8:30 முதல் மாலை 4:30 வரை) நகர மண்டபத்தில் நேரில் அல்லது **முன்பதிவுடன் மாத்திரம்** 89 Northline Rd இலுள்ள ரொறன்ரோ தேர்தல் அலுவலகத்தில் சான்றளிக்கப்பட வேண்டும்.

முன்பதிவு செய்ய **VoterRegistration@toronto.ca என்ற** மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

பதிலாள் வாக்களிப்புத் தொடர்பாக மேலும் அறிய [www.toronto.ca/ByElection (தேர்தல்)](www.toronto.ca/ByElection) க்குச் செல்லவும் அல்லது 311 ஐ அழைக்கவும்.

# யார் வாக்களிக்கலாம்

நீங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில், ஸ்காபறோ-றூஜ் பார்க், தொகுதி 25 கவுன்சிலர் இடைத்தேர்தலில் வாக்களிக்கலாம்:

- ஒரு கனேடியக் குடிமகன்; மற்றும்
- குறைந்தது 18 வயது; மற்றும்
- ஸ்காபறோ-றூஜ் பார்க்கின் தொகுதி 25 இல் வசிப்பவர்; அல்லது
- ரொறன்ரோ நகரில் வசிக்காதவராக இருந்தாலும், நீங்களோ அல்லது உங்கள் மனைவியோ ஸ்காபறோ-றூஜ் பார்க்கின் தொகுதி 25 இல் வீடு வைத்திருக்கிறீர்கள் அல்லது வாடகைக்கு இருக்கிறீர்கள்; மற்றும்

- எந்தவொரு சட்டத்தின் கீழும் வாக்களிப்பது தடைசெய்யப்படவில்லை.

ஸ்காபறோ-றூஜ் பார்க்கின் தொகுதி 25க்குள் நீங்கள் எத்தனை வீடுகளை வைத்திருந்தாலும் அல்லது வாடகைக்கு எடுத்தாலும், நீங்கள் ஒரு முறை மட்டுமே வாக்களிக்க முடியும். ரொறன்ரோவில் வசிப்பவர், அவர் வசிக்கும் தொகுதியில் வாக்களிக்க வேண்டும், அவர் அதிக வீடுகளை வைத்திருக்கும் அல்லது வாடகைக்கு எடுக்கும் தொகுதிகளில் அல்ல.

**பாடசாலைக்காக ரொறன்ரோவிலிருந்து தொலைவில் வசிக்கும் மாணவர்கள்**

நீங்கள் ரொறன்ரோவின் தொகுதி 25, ஸ்காபறோ-றூஜ் பார்க்கில் வசிப்பவராக இருந்து, வேறு ஒன்ராறியோ நகராட்சியில் படித்து வந்தால், இந்த இடைத்தேர்தலில் வாக்களிக்க நீங்கள் தகுதியுடையவர்.

மேலும் அறிய **www.toronto.ca/ByElection (தேர்தல்)**.

# வாக்காளர் பட்டியலில் இடம் பெறுங்கள்

ஓகஸ்ட் 18 முதல், வாக்காளர் பட்டியலில் உள்ள உங்கள் தகவல்கள் சரியாக உள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியம், குறிப்பாக நீங்கள் சமீபத்தில் இடம் மாறியிருந்தால் அல்லது உங்கள் பெயரை மாற்றியிருந்தால். நீங்கள் செப்ரம்பர் 4 ஆம் திகதிக்குள் வாக்காளர் பட்டியலில் இருந்தால், ஒரு வாக்காளர் தகவல் அட்டை உங்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்படும், அல்லது உங்கள் வாக்காளர் தகவல் அட்டையைப் பார்க்கப், பதிவிறக்க அல்லது பிரதிசெய்ய MyVote ஐப் பயன்படுத்தலாம்.

செப்ரம்பர் 21 ஆம் திகதி மாலை 7 மணி வரை, வாக்காளர் பட்டியலில் உங்கள் தகவல்களைச் சேர்க்க அல்லது புதுப்பிக்க:

- **www.toronto.ca/MyVote**க்குச் செல்லவும்
- VoterRegistration@toronto.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்

முன்கூட்டிய வாக்களிப்பின்போது (செப்ரம்பர் 20 மற்றும் 21) அல்லது தேர்தல் நாளில் (செப்ரம்பர் 29) நேரில் வாக்களிக்கும்போது நீங்கள் உங்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கலாம். **நீங்கள் வாக்காளர் பட்டியலில் இருந்தாலும் கூட, நீங்கள் வாக்களிக்கும்போது தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் அடையாள அட்டையைக் (ID) காட்ட வேண்டும்.**

# MyVote

ஒகஸ்ட் 18 முதல், www.toronto.ca/MyVoteக்குச் செல்லவும்:

- நீங்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளீர்களா என்பதை அறிய
- உங்கள் வாக்காளர் பட்டியல் தகவல்களைச் சேர்க்க அல்லது புதுப்பிக்க **(செப்ரம்பர் 21 மாலை 7 மணி வரை)**
- கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலைப் பார்க்க
- எங்கு, எப்போது வாக்களிக்க வேண்டும் என்பதையும், வாக்களிக்கும் இடங்களைப் பற்றிய அணுகல் தகவல்களையும் கண்டறிய
- உங்கள் வாக்காளர் தகவல் அட்டையைப் பார்க்க, பதிவிறக்க அல்லது பிரதியெடுக்க
- வாக்குச்சீட்டின் மாதிரியைப் பார்க்க

வாக்களிக்கும் இடங்கள் மாறக்கூடும் என்பதால், நேரில் வாக்களிக்கச் செல்வதற்கு முன் MyVote-ஐப் பார்க்கவும்.

# வாக்காளர் தகவல் அட்டை

**வாக்காளர் தகவல் அட்டைகள் (VICகள்) செப்ரம்பர் 11 முதல் தபாலில் அனுப்பப்படும்.**

**முக்கிய தகவல்: கனடா போஸ்ற் சேவையில் இடையூறு ஏற்பட்டால்,** நீங்கள் தபால் மூலம் VIC-ஐப் பெறாமல் போகலாம். உங்கள் டிஜிட்டல்

வாக்காளர் தகவல் அட்டையைப் பெற்று, நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது அதை உங்கள் மொபைல் சாதனத்தில் காண்பிக்க நீங்கள் [www.toronto.ca/MyVote](www.toronto.ca/MyVote) க்குச் செல்லலாம்.

- நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட VICகளைப் பெற்றால், நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்கள் அடையாளத்துடன் பொருந்தக்கூடிய மிகவும் துல்லியமான அட்டையை வாக்களிக்கும் இடத்திற்குக் கொண்டு செல்லவும்.
- உங்கள் VIC-யைப் பெற்று, அதிலுள்ள தகவல்கள் தவறாக இருந்தால், நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது அட்டையை உங்களுடன் எடுத்துச் சென்று வாக்காளர் பட்டியல் திருத்த விண்ணப்பத்தை நிரப்பச் சொல்லலாம்.
- உங்கள் வீட்டில் வசிக்காத ஒருவருக்கு VIC கிடைத்தால், நீங்கள் அட்டையில் **Return to Sender** என்பதை அச்சிட்டு எந்தக் கனடா போஸ்ற் தபால் பெட்டியிலும் போடலாம்.
- உங்கள் VIC-ஐ அடையாளச் சான்றாகப் பயன்படுத்த முடியாது.
- வாக்களிக்க உங்களுக்கு VIC தேவையில்லை. VIC பற்றி மேலும் அறிய [www.toronto.ca/VIC](www.toronto.ca/VIC)க்குச் செல்லவும்.

# ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாளம்

நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது அடையாள அட்டை (ID) அவசியம். உங்கள் பெயரையும் தகுதிபெறும் தொகுதி 25, ஸ்காபறோ-றூஜ் பார்க் முகவரியையும் காட்டும் ஒரு அடையாள அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதனை நினைவில் கொள்ளவும். உங்களிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டை இல்லை மற்றும் வாக்காளர் பட்டியலில் இல்லையென்றால், வாக்குச்சீட்டைப் பெறுவதற்காக உங்கள் அடையாள அட்டையுடன் திரும்பி வரும்படி கேட்கப்படுவீர்கள்.

கடவுச்சீட்டை (passport) அடையாளச் சான்றிதழாகப் பயன்படுத்த முடியாது.

**ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டைக்கான உதாரணங்கள்:**

- ஒன்ராறியோவில் வழங்கப்பட்ட புகைப்பட அட்டை, வாகனச் சாரதிப் பத்திரம் அல்லது மோட்டார் வாகன அனுமதி (வாகனப் பகுதி).
- இரத்துச் செய்யப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட காசோலை, கடன் அட்டை (credit card) அல்லது வங்கிக் கணக்கு அறிக்கை.
- மின், தொலைபேசி அல்லது கேபிள் டிவி, தண்ணீர், எரிவாயு ஆகியவற்றிற்கான பயன்பாட்டுப் பற்றுச்சீட்டு அல்லது பொதுப் பயன்பாட்டு ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு.
- ஒரு வேலைவழங்குநரால் வழங்கப்பட்ட காசோலை அடித்துண்டு (stub), T4 அறிக்கை அல்லது சம்பளப் பற்றுச்சீட்டு.
- ஒன்ராறியோ வேர்க்ஸ் (Ontario Works) அல்லது ஒன்ராறியோ ஊனமுற்றோர் ஆதரவு திட்டத்திற்கான (Ontario Disability Support Program) நேரடி வைப்பு அறிக்கை.
- சொத்து வரி மதிப்பீடு, வருமான வரி மதிப்பீட்டு அறிவிப்பு, சிறுவருக்கான வரிச் சலுகை அறிக்கை.
- வீட்டு அடமானக் கடன் (mortgage) அறிக்கை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டைகளின் முழுமையான பட்டியலை இங்கே காணலாம் [www.toronto.ca/ByElection](http://www.toronto.ca/ByElection).

# அணுகல் தகவல்

அனைத்து வாக்களிப்பு மையங்களும் அணுகக்கூடியவை. நுழைவுப் புள்ளிகள், சாய்வுப் பாதைகள் (ramps), தானியங்கிக் கதவுத் திறப்பாளர்கள் மற்றும் வாக்காளர் உதவி முனையங்கள் (VAT) கிடைப்பது பற்றிய தகவல்கள் இங்கே கிடைக்கின்றன. [www.toronto.ca/MyVote](http://www.toronto.ca/MyVote) இல் அல்லது [www.toronto.ca/ByElection](http://www.toronto.ca/ByElection)இல். வாக்களிப்பதில் உங்களுக்கு ஏதாவது தடை ஏற்பட்டால், 311 என்ற

எண்ணை அழைக்கவும் அல்லது elections@toronto.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**அணுகக்கூடிய வாக்களிப்பு உபகரணங்கள்**

வாக்காளர் உதவி முனையம் (VAT) என்பது இயலாமையைக் கொண்ட வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சீட்டைத் தனிப்பட்ட முறையிலும் சுதந்திரமாகவும் பதிவு செய்ய அனுமதிக்கும் ஒரு சாதனமாகும். இது ஒரு தொடுதிரை (touch screen), ஒரு குரல் செயல்பாடு (audio function), ஒரு பிரெய்ல் கீ பாட் (braille key pad), ஒரு sip/puff tube சாதனம், ஒரு rocker paddle/foot switch மற்றும் எழுத்து அளவுகள் மற்றும் வண்ண மாறுபாட்டைச் சரி செய்வதற்கான zoom அம்சங்களைக் கொண்டுள்ளது.

முன்கூட்டியே வாக்களிக்கும் போது இரண்டு வாக்களிக்கும் இடங்களிலும் VAT கிடைக்கும். தேர்தல் நாளில் ஒரு VATஐப் பயன்படுத்தத் தேவையேற்பட்டு அது உங்கள் நியமிக்கப்பட்ட வாக்களிப்பு இடத்தில் இல்லை என்றால், வாக்குச் சீட்டு மாற்றத்தை எவ்வாறு கோருவது என்பதை அறிய 311 ஐ அழைக்கவும். VAT இடங்களின் விபரங்கள் [www.toronto.ca/MyVote](http://www.toronto.ca/MyVote)இன் My Voting Places tab இல் கண்டறியவும்.

## பிற சேவைகள்

பின்வரும் அணுகக்கூடிய வாக்களிப்புத் தெரிவுகள் மற்றும் சேவைகள் பற்றி மேலும் அறிய 311 ஐ அழைக்கவும் அல்லது **www.toronto.ca/ByElection** ஐப் பார்வையிடவும்:

- நீங்கள் நேரில் வாக்களிக்க முடியாவிட்டால், உங்கள் சார்பாக வாக்களிக்க ஒரு வாக்களிக்கும் பதிலாளை நியமிக்கலாம்.
- உங்கள் நியமிக்கப்பட்ட வாக்களிப்பு இடத்தில் ஒரு தடையை எதிர்கொண்டால் வாக்குச் சீட்டு மாற்றத்தைக் கோரவும்.
- நீங்கள் உடல் ரீதியாக வாக்களிக்கும் இடத்திற்குள் செல்ல முடியாவிட்டால், உங்கள் வாக்குச் சீட்டை உங்கள் வாகனத்திற்கோ அல்லது வாக்களிக்கும் இடத்திற்குள் உள்ள வேறு பகுதிக்கோ கொண்டு வரச் சொல்லவும்.
- உங்கள் வாக்குச்சீட்டில் குறியிட உதவ ஒரு நண்பரை அழைத்து வரவும் அல்லது தேர்தல் அதிகாரியிடம் உதவி பெறவும்.
- அனைத்து வாக்களிப்பு மையங்களும் ஆதரவு நபர்கள் மற்றும் சேவை விலங்குகளைப் பயன்படுத்துவதை வரவேற்கின்றன.

- அனைத்து வாக்களிப்பு மையங்களிலும் வாக்களிப்பது எப்படி என்பதற்கான வழிமுறைகள் உருப்பெருக்கத் தாள்கள் மற்றும் braille இல் கிடைக்கும்.
- செவிப்புலனற்றோர் அல்லது சரியாகக் காது கேட்காதோர் பற்றிய தகவல்களை 711 என்ற எண்ணை அழைப்பதன் மூலம் பெறலாம்.

# சமூக ஊடகங்கள், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல்

**X:** @cityoftoronto

**Facebook:** ரொறன்ரோ நகரம்:

**Instagram:** @cityofto

**இணையத்தளம்:** www.toronto.ca/ByElection (தேர்தல்)

**மின்னஞ்சல்:** elections@toronto.ca

# தகவல் மொழிபெயர்ப்பு

கூகிள் மொழிபெயர்ப்புக் கருவியைப் பயன்படுத்தி ரொறன்ரோ நகரத்தின் இணையத்தளத்தைப் பல மொழிகளில் மொழிபெயர்க்கலாம். 180க்கும் மேற்பட்ட மொழிகளில் நகர சேவைகள் பற்றிய தகவல்களைப் பெற 311 என்ற எண்ணையும் அழைக்கலாம். வேறு மொழியில் தகவல் தேவைப்பட்டால், 311 ஐ அழைக்கவும் அல்லது **www.toronto.ca/ByElection**ஐப் பார்வையிடவும். எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்த வழிமுறைகள் அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் 26 மொழிகளில் கிடைக்கும்.